DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | டி.எஸ். ஜெயராமன் |
| Father's Name | ஏ.ஆர்.சுப்பிரமணி கவுண்டர் |
| Village | அரப்பாண்டகுப்பம் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 77 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **30.01.2026**

**O.S. No.101/2018** **பி.வா.சா.1** **11.49 PM – 01.10 PM**

**குறுக்கு விசாரணை :–**

1. வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் உடன்பிறந்த சகோதரர் ஆவார். எனக்கும் வாதிக்கும் எத்தனை வருடமாக சரியான பேச்சு வார்த்தை இல்லை என்றால் சுமார் 25 வருடங்கள் இருக்கும். வாதி எங்கள் ஊரில் குடி பெயர்ந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் முன்பு சென்னையில் குடியிருந்து வந்தார் தற்போது கடந்த 12 முதல் 13 ஆண்டுகளாக எங்கள் ஊரில் வசிக்கிறார்.

2. வாதி சென்னையில் குடியிருந்த சமயம் ஊரில் விசேஷங்களுக்கு வந்து செல்வரா என்றால் எங்கள் வீட்டு அலுவலருக்கு வர மாட்டார் ஆனால் சில விசேஷங்களுக்கு வந்து செல்வார். வாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகள் என கேள்விப்பட்டேன்.

3. எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் சுமார் 200 முதல் 250 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு பாகமாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் வாதிக்கு பாகமாககொடுக்கப்பட்ட சொத்துக்கள் எங்களது தந்தையாருக்கு பாதிக்கப்பட்ட சொத்தா என்றால் இல்லை தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும்.

4. 27.02.1987 அன்று வா.சா.ஆ.1 ஆன பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய சமயம் எங்களுக்கிடையே பேச்சுவார்த்தை இருந்ததா என்றால் இல்லை அப்போதும் சரியான பேச்சு வார்த்தை இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தாயார் மற்றும் தந்தைக்கு A ஷெட்யூல் சொத்தும் எனக்கு B ஷெட்யூல் சொத்தும் வாதிக்கு C ஷெட்யூல் சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. எனது பெற்றோர்கள் தற்போது உயிருடன் இல்லையென்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பிரிக்கும் சமயம் பெற்றோர்கள், ஊர் பெரியவர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்திலோ அல்லது ஒதுக்கப்பட்ட பாகத்திலோ எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். பின்பு தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. பின்பு வாதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் இருந்த புளியமரம் நிழலானது என்னுடைய நிலத்தில் விழுவதினால் மேற்படி பிரச்சினை ஏற்பட்டு பின்பு அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் எனக்கும் எனக்கு ஒதுக்கப்பட்ட பாகம் அவருக்கும் பரிமாற்றம் செய்து கொள்ள 17.11.1999 தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனை பத்திரமானது ஊர் பெரியவர்கள் உறவினர்கள் முன்னிலையில் எங்களுக்கிடையே ஏற்பட்டது என்றால் சரிதான்.

7. மேற்படி இரண்டு பத்திரங்களின் அடிப்படையில் தனித்தனியாக வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் 4 ஏக்கர் 4 சென்ட் ஆகும். வாதிக்கு எவ்வளவு விஸ்தீரணம் சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் 3 ஏக்கர் 41 சென்ட் ஆகும்.

8. நான் பெரியவர் என்ற முறையில் எனக்கு அதிகமாக பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரி அல்ல அவருக்கு ரோட்டின் ஓரமாக பாகம் ஒதுக்கப்பட்டது. ஆவணங்களின்படி எனக்கு அளவுகள் அதிகமாக இருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி வாதிக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு வருவாய் துறை ஆவணங்கள் வாதி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

9. என் தரப்பில் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வக்கீல் இடம் கொடுத்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொத்திற்கு அமைக்கும் போது 13 அடி வண்டி வழி இருக்கும்போது பத்து அடி மட்டும் விட்டுவிட்டு வேலி போட்டுக் கொண்டார் அதனால் பிரச்சனை ஏற்பட்டது அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. 13 அடி வண்டி வழி இருந்தது குறித்து எங்களுக்கு குறைவாக வண்டி வழி ஒதுக்கப்பட்டதால் நான் வண்டி வழியை போடக்கூடாது என தடுத்து நிறுத்தினேன் என்றால் சரிதான். 13 அடி வண்டி வழி குறித்து நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்து இருக்கிறேன். மேற்படி வண்டி வழி என்பது எனக்கு மட்டும் தனியாக பாத்தியப்பட்டதா அல்லது இருவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டதா என்றால் எங்கள் இருவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது.

11. எங்கள் இருவரையும் தவிர மற்றவர்களுக்கு போக வர எந்த வித வழிப்பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை தெற்கு புறமாக அருந்ததியர் பகுதிகளுக்கு செல்லும் 3 அடி அகல வழி பாத்தியத்தை இருப்பது குறித்து இந்த வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் மேற்படி 10 அடி அகல பொது பாதைக்கு தெற்கே 3 அடி வழி இருப்பது குறித்து எந்தவொரு ஆவணமும் என் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

12. வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரத்தின் படி எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 441/A ல் 7 சென்ட் நிலம் வாதிக்கு நான் ஒதுக்கினேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நான் கொடுத்த சர்வே எண். 441/A படி தற்போது 441/3 என உட்பிரிவு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மெய்கவுண்டர் வட்டத்திற்கு செல்லும் காணாற்றுக்கு தெற்கே செல்லும் பகுதியில் இருந்து 120.6 மீ நீளமும், 2.4 மீ அகலமும் கொண்ட மொத்தம் 7 சென்ட் சொத்தினை வா.சா.ஆ.2 படி நான் வாதிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான்.

13. 7 சென்ட் சொத்தில் பிரச்சனை இருப்பதாக தான் வாதி 2வது ஐட்டம் சொத்தாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த

இடத்தில் என்னுடைய சொத்து சற்று மேட்டு பகுதியாகவும் வாதியின் சொத்து பள்ளத்திலும் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு இடையே வரப்பில் பிரச்சனை இருப்பது குறித்து வாதி மாதிரி வரைபடத்துடன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரத்தின் படி கொடுக்கப்பட்ட சொத்தை ஒட்டி ஒரு வீடும் மாட்டு கொட்டகையும் உள்ளது என்றால் சரிதான்.

14. மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தில் எனக்கு அந்த நிலம் கொடுக்கும் போது வாதி பெயரில் இருந்த அதன் சர்வே எண் 441/1B என்றால் சரிதான். மேற்படி சொத்தானது எனக்கு கொடுத்த பின்னர் அதே சர்வே எண்ணில் மீதமுள்ள சொத்து தற்போது வாதியின் பெயரில் சர்வே எண்.441/1B2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கொடுத்த 7 சென்டை ஒட்டி தான் சர்வே எண்.441/1B2 சொத்திற்கு முதலாவது ஐட்டம் சொத்தாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வடக்கு தெற்காக நீள அகலம் கொண்ட 55.6 மீ நீளமும், 1 மீ அகலமும் கொண்ட சொத்தை தான் வழக்கு சொத்தாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த சொத்தை குறித்து தான் வாதிக்கு ஆவணப்படி பாத்தியப்பட்ட சொத்தில் முள்வேலி அமைக்கும் போது 20.8.2018 அன்று பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இது குறித்து இருவரும் ஒருவருக்கு எதிராக அம்பலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் வாதி மட்டும் தான் என் மீது புகார் அளித்தார். காவல் நிலைத்தில் ஊர் பெரியவர்கள், உறவினர்கள் மற்றும் காவல் அதிகாரிக்ள முன்னிலையில் வாதியின் சொத்திலும், எங்களுக்கு பொதுவாக உள்ள வழிபாத்தியம் குறித்து ஆட்சேபனை இல்லை என்று எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

15. அதன்பின்னிட்டும் வாதி முள்வேலி அமைக்க முற்படும் போது நான் ஒத்துழைத்து நான் கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல நான் ஒத்துழைப்பு கொடுத்தேன். வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஆவணப்படி முள்வேலி அமைப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான், சாட்சி மேலும் அது 13 அடி வழி என கூறுகிறார். வாதிக்கு பாத்தியப்பட்ட 10 அடி சொத்தில் பொதுவாக இருவரும் பயன்படுத்த ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் கூறும் 3 அடி குறித்து எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்திருக்கிறேன்.

16. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றால் இல்லை நகல் தான் உள்ளது, அசல் ஆவணம் வாதியிடம் உள்ளது என சாட்சி மேலும் கூறுகிறார். வாதி வழக்கை தாக்கல் செய்யும்போதே அசல் ஆவணம் பெரியவர் என்ற முறையில் என்னிடம் தான் உள்ளது என வழக்குரையில் தெரிவித்ததற்கு எதிராக எதிர்வழக்குரையில் எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி அதற்கு என்னிடம் கேட்க வில்லை அதனால் நான் சொல்லவில்லை என பதில் கூறுகிறார்.

17. பாகப்பிரிவினை ஆவணத்தில் நானும், வாதியும் பொதுவாக அந்த 10 அடி அகல வழியை பயன்படுத்திக்கொள்ள வேண்டியது என எழுதப்பட்டடுள்ளது என்றாலும், 13 அடி என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்தானது வாணியம்பாடி முதல் திம்மாம்பேட்டை வரை செல்லும் தார் சாலை ஒட்டி உள்ளது என்றாலும் முன்னர் வாதியின் பாகமும் பின்னால் என்னுடை பாகமும் உள்ளது என்றால் சரிதான். தார் சாலையை ஒட்டி வாதியின் சொத்தை ஒட்டி 15 அருந்ததையர் குடும்பங்கள் உள்ளது என்றால் சரிதான், 5 குடும்பங்கள் இருக்கும்.

18. மேற்படி 5 குடும்பத்திற்கு என்னுடைய முன்னோர்கள் தான் அந்த பகுதியை கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் கூறுவது போன்று என்னுடைய சொத்தோ வாதியினுடைய சொத்தோ தாண்டி அருந்ததியர் குடும்பங்கள் பாகப்பிரிவினை செய்யும் சமயம் இல்லை என்றாலும் அதனால் தான் எனக்கும் வாதிக்கும் 10 அடி மட்டும் தான் பொது வழி விடப்பட்டது என்றால் சரியல்ல.

19. என்னுடைய தகப்பனார் அவர்கள் முன்னால் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரிதான். நான் கூறுவது போன்று 3 அடி வழி குறித்து பிரச்சனை இருந்தது என்றால் பின்னால் இருந்த நபர்கள் வழி குறித்து வழக்கோ புகாரோ தாக்கல் செய்திருப்பார்கள் அப்படி எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளார்கள். என்னுடைய சொத்தை ஒட்டி தான் மேற்கு புறமாக மேற்படி நபர்களுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான்.

20. நான் அந்த நபர்கள் இருக்கும் பகுதிக்கு செல்லும் வழியில் தடுத்ததால் பிரச்சனை ஏற்பட்டு அவர்கள் எனக்கு எதிராக புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல. அருந்ததையர் காலனியில் வசிக்கும் நபர்களுக்கு எனக்கும் எத்தனை காலம் பேச்சு வார்த்தை இல்லை என்றால் இந்த

வழக்கு தாக்கல் செய்வதற்கு 3 வருடங்கள் முன்பில் இருந்து. 1 , 2 ஐட்ட வழக்கு சொத்து குறித்து நான் நான் தான் ஆக்கிரமித்து இடையூறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்தேனா இல்லையா என்பதை பார்வையிட நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமிக்கப்பட்டு வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான்.

21. நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் சமயத்தில் வாதியும் நானும் எனது மகள் தமிழ் செல்வியும் உடன் இருந்தோம் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளக்கும் சமயம் கிராம நிர்வாக அலுவலர் நில அளவையர் உடனிருந்து அழுந்தார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் பொய்யான அளவீடு கொடுத்துள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். வாதியின் சொத்தை நான் ஆக்கிரமித்து அழிம்பு செய்ததை நீதிமன்றத்திற்கு தெரிய வந்து விடும் என்பதால் தான் மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை பொய்யானது என தற்போது கூறுகிறேன் என்றால் சரியல்ல.

22. சாட்சியிடம் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படத்தை காண்பித்து கேள்வி கேட்கப்படுகிறது, அந்த புகைப்படத்தில் நானும், என்னுடன் பக்கத்து நிலத்துக்காரர் பீமராஜ் என்பவரும் இருக்கிறோமா என்றால் சரிதான். மேற்படி பீமராஜ் என்பவரை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியாக விசாரணை செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கும் பீமராஜ் என்பவருக்கும் விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி பீமராஜ் என்பவருக்கு என்னையும் வாதியையும் எங்கள் குடும்ப சொத்தை பற்றியும் தெரியும் என்றால் சரிதான்.

23. நீதிமன்ற ஆணையர் வந்திருந்தபோது எனக்கும் வாதிக்கும் சொத்துக்கிடையே அளவையரால் அளந்து ஒரு கல் வைக்கப்பட்டது என்றால் சாட்சி அதற்கு உண்மையான சர்வே கல் வைத்து அளக்கப்படவில்லை என பதில் கூறுகிறார். நீதிமன்றம் மூலம் நியமிக்கப்பட்ட ஆணையர் அளக்கும் போதும் நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய தவறான நடவடிக்கை குறித்து நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் நீதிமன்ற ஆணையரையே மிரட்டினேன் என தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல தவறு.

24. நான் கூறுவது போன்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு என்றால் அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ரத்து செய்யவும் வேறொரு நீதிமன்ற ஆணையரை நியமிக்கவோ ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் இல்லை. நிலத்தை அளக்கும் போது நில அளவையர் கொடுத்த வரைபடத்தின் படி நான் சொத்தை அழிப்பும் ஆக்கிரமிப்பும் செய்ததாக குறிப்பிட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

25. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் நான் சொத்தை அழிந்து செய்தது குறித்து குறிப்பிட்டு காண்பித்துள்ளார் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது தவறு. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு என்னுடைய வழக்கறிஞர் மூலம் ஆட்சேபனை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையிலும் நான் அழிம்பு செய்ததாக அறிக்கையில் குறிப்பிட்டதற்கு மறுத்த ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் நீதிமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என விட்டுவிட்டேன்.

26. நான் வாதியினுடைய சொத்தை அழிப்பும் ஆக்கிரமிப்பும் செய்துள்ளேன் என்றாலும், அதை நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி
வாணியம்பாடி.